www.padippakam.com



# 21

இங்கு காணப்படும் இன்னொரு புராதன குளம் குருந்தன் குளமாகும். இந்த இரு குளங்களையும் பிரிப்பது போன்று குருந்தன்மலை அமைந்துள்ளது. புத்தரின் இலங்கைக்கான இரண்டாவது விஜயத்தின் போது இந்தக் குருந்தன் மலைக்கு அவர் வந்தார் என்பது ஐதிகம். இப்பகுதிகளில் பாழடைந்த கட்டிடச் சிதைவுகள் உள்ளன. குருந்தன் குளமலையின் உச்சிவரை குருந்தன் குள அணையிலிருந்து கற்படிகள் பொழியப்பட்டுள்ளன. குருந்தன் மலையுச்சி நீளவட்டத் தட்டையாகவுள்ளது. ஏழு, எட்டு என்பது மகாவம்சம் கூறும் நிகழ்ச்சியாகும்.

மன்னாருக்கும் புத்தளத்திற்கும் இடையில் வடமேற்குக் கரையோரத்தில் குதிரைமலை அமைந்துள்ளத. குதிரைமலை புராதன துறைமுகமாகும். கி.மு. 50 ஆம் ஆண்டுக்கு முந்திய மட்பாண்டங்கள் இங்கு கிடைத்துள்ளன. அவற்றில் சட்டிகள், பானைகள், ஜாடிகள் அடங்கியுள்ளன. அல்லி அரசாணியின் அரண்மனை இங்கிருந்ததாக ஐதிகம். பிலினி என்பார் குறிப்பிட்ட ஹிப்போறஸ்(ஹிப்போ - குதிரை) துறை குதிரைமலையெனக் கருதுவர். எட்டாம் நூற்றாண்டளவில் அராபியாவிலிருந்து வந்த முகமதியர்களின் குடியிருப்புக்கள் குதிரைமலையில் காணப்பட்டதாக காசிச்செட்டி குறிப்பிட்டுள்ளார்.

பூநகரிப் பகுதியில் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த தொல்லியலாய்வுகளும் பொருட்களும் ஆய்வுகளும் யாழ்ப்பாண அரசின் சிங்கைநகர் பூநகரிப் பகுதியில் இருந்துள்ளன என நிறுவியுள்ளன. சேனன், குத்திகன், எல்லாளன், கலிங்கமாகன் முதலான தமிழரசர்கள் இப்பகுதியிலிருந்தே ஆட்சி செய்து தென்னிலங்கை இராசதானி மீது படையெடுத்துக் கைப்பற்றி ஆண்டுள்ளனர். கட்டிடங்களின் சிதைந்த பகுதிகள், சின்னச் செட்டிகுளம், செட்டிகுளம், பாலம்பிட்டி, வேனாயன்குளம் முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. திரு.ஜே.பி. லூயிஸ் என்பவர் பழைய தமிழ்க் கையெழுத்துக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய நூலில் சுமார் கி.பி. 247 இல் மதுரையிலிருந்து பரவர்களுடன் வந்த வீரவராயன் செட்டி என்ற பெயருடைய வாணிகன் ஒருவன் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்றுக் கரையை வந்தடைந்தாரென்றும் பின் அவன் தன்னைச் சேர்ந்தாருடன் வந்து செட்டிகுளத்தில் குடியேறி வவ்வாலை என்ற பெயருடைய வெளியே ஏழு வன்னிப்பிரதேசங்கள் இருந்துள்ளன. பனங்காமம், மேல்பற்று, முள்ளியவளை, கருநாவல்பற்று, கரிக்கட்டு மூலை, தென்னாமரவடி என்பன அவற்றில் முக்கியமானவை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வன்னிமையால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன.

வன்னி நாடு, நுவரகலாவியாப் பிரதேசத்தையும் உள்ளடக்கிய பெருநிலப்பரப்பு எனச் சிங்கள சிங்கள நாமவழி தழுவியனவா இருக்க வன்னியின் தொண்ணூா சதவீதமான கிராமப் பெயர்கள் முற்று முழுதான தமிழ்ப்பெயர்களாக உள்ளன. வன்னிப்பிரதேசங்கள் சைவ மக்களாலும் தமிழ் மக்களாலும் விரும்பிக் குடியேறப்பட்ட பிரதேசங்களாகவுள்ளன. வன்னிப்பிரதேச மக்கள் வன்னியர் என வரலாற்று நூல்கள் வரையறுக்கின்றன. வன்னியர்கள்

**-செங்கை ஆழியான்-**

வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனை அவை 'மகா வன்னி' என்கின்றன. நுவரகலாவியா மகாவன்னியாக வரலாற்றுக் காலத்திலிருந்து விளங்கி வருகின்றது. நுவரவீவா, கலாவீவா, பதவியா ஆகிய மூன்று நீர்ப்பாசனக் குளங்களின் நீர்ப்பாய்ச்சும் பரப்புப் பிரதேசம் இம்மூன்று குளங்களின் பெயரால் நுவர - கலா - வியா என பண்டைக்காலத்தில் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த அக்கினி குலத்தைச் சேர்ந்த ஆரியரல்லாத வகுப்பினர் ஆவர். அவர்கள் மறத்தொழில் புரியும் வீரர் பரம்பரையில் தோன்றியவர்கள். வன்னியர் அக்கினிகுலச் சத்திரியரென்றும் இவர்கள் யாகாக்கினியிலிருந்து தோன்றினரென்றும் கூறப்படுகிறது. இவை எவ்வளவு தூரம் ஏற்புடையனவென்பது கற்றோருக்குப் புரியும்.

வன்னிப்பிரதேசம் என்று வடவிலங்கை என்று அழைக்கப்படுகின்றது என்பதற்கு இரு இயல்பான விளக்கம் தரமுடியும். இப்பிரதேசதம் கடும் வறட்சியான பகுதி. வன்னி என்றால் வறட்சி. நெருப்பு போல இங்கு கடும் வெப்பம் நிலவும். வன்னி வெப்பம் என்பது இதனையே குறிக்கும். மேலும் வன்னி முன்பு மரங்கள் நிறைந்த பிரதேசமாதலால்

# ஈழத்தவர் வரலாறு


## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

அடி நீளமான கருங்கற்சுவரின் பகுதி அங்கு காணப்படுகின்றது. சதுரக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இவை கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்குரியவை. குருந்தனூர் ஒரு புராதன நகரமாக இருந்திருக்கவேண்டும். பேராற்றில் புராதன குளமொன்றுள்ளது. அதுவே அலைக்கல்லு போட்ட குளம் அல்லது பண்டாரக்குளம் ஆகும். பண்டாரக்குளம் பகுதி, பண்டாரவன்னியனின் வதிவிடக்கிராமமாகும்.

வரலாற்றுக் காலத்தில் மாந்தை, முசலி, நானாட்டான் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய சமவெளி நீர்ப்பாசனக் குளங்களையும் அவற்றினடியாக வயல்களையும் கொண்டிருந்தது. இப்பிரதேசம் சுதேச மக்களான நாகர்களால் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இராச்சதகுளமெனும் சோதியன் கட்டுக் கரைக்குளம் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது. விஜயனுக்கு முதலேயே இப்பிரதேசத்தில் நெற்செய்கை நடைபெற்றுள்ளது. மாதோட்டம் பண்டை துறைமுகமாகும். விஜயனையும் அவனது தோழர்களை மணப்பதற்காக வந்த பாண்டிய இளவரசியும் தோழிகளும் மாதோட்டத்துறையிலேயே (மகாதீர்த்தம்) வந்திறங்கினர்

வன்னிப்பிரதேசத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவுள்ளன. 'ஈழம்' என்ற பெயருடன் கிடைத்த

கேணி ஒன்றையும் சந்திரசேகருக்கு கோயில் ஒன்றையும் கி.பி.289 இல் அமைத்தான் என்றும்




பிராமி எழுத்தினைக் கொண்டு ஒடும் அதன் சார்பான தொடர்

குறித்துள்ளார். யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வழங்கப்படுகின்றது.

### வன்னிக் குடியேற்றங்கள்

வன்னிப்பிரதேசத்தின் ஆதிக்குடிமக்கள் நாகர் ஆவர். இயக்கர்களையும் அவர் வழி வந்த வேடுவ மக்களையும் வன்னிப்பிரதேசம் கொண்டிருந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தின் பயன்பாட்டை உணராத எமது மூதாதையினரான பண்டைத் தமிழ் மக்கட் கூட்டத்தினர் தமக்குப் பரிச்சயமான தரைமேல் வடிகாலமைப்பைக் கொண்ட நதிகள் பாய்கின்ற வன்னிப்பிரதேசத்தை ஆரம்பத்தில் தமது வதிவிடங்களாகக் கொண்டிருந்தனர் எனக் கொள்ளலாம். பண்டைநாளில் வன்னிப்பிரதேசத்தின் குடித்தொகை மிகவதிகமாகவும் செறிவாகவும் இருந்துள்ளன என்பது பல அறிஞரின் முடிவு. பாழடைந்து கிடக்கின்ற வன்னிக்குளங்களினதும் கிராமங்களினதும் எண்ணிக்கை இவ்வாறான முடிவினை எடுக்க வைத்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள எண்பது சதவீதமான கிராமப் பெயர்கள் வன்னிப்பிரதேசம் எனப்பட்டதெனலாம். மரங்ளை அடிப்டையாகக் கொண்டு வன்னிப்பிரதேசத்துக் கிராமங்ள் புளியங்குளம், பூவரசங்குளம், மருதன்குளம் எனப் பலவாறு பெயரிடப்பட்டுள்ளன. காரணப்பெயர்கள் வன்னிப்பிரதேசத்தில் பரவலாகவுள்ளன. எவ்வாறாயினும் வன்னிப்பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்த அனைவரும் வன்னியர் எனப்பட்டனர்.

வன்னியில் இரு தடவைகளாக குடியேற்றம் ஏற்பட்டதென்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவற்றுள் முதற் குடியேற்றம் குளக்கோட்டன் காலத்தில் ஏற்பட்டதென்றும் இரண்டாம் குடியேற்றம் பாண்டிய நாட்டில் இருந்து வந்த எண்பத்தொன்பது வன்னியரின் வருகையோடு ஏற்பட்டதென்றும் கூறும். தமிழ்நாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்து அடங்காப்பற்று என விளங்கிய வன்னியை அடக்கி அங்கு அதிகாரமும் பெற்ற வன்னியரின் வலாற்றைப் பொருளாகக் கொண்டு வையாபாடல் என்றொரு நூலேயுள்ளது.

(தொடரும்)